

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் சுரண்டை அழகு பார்வதி அம்மன் கோவில் மைதானத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றி பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார்,மாநில தேர்தல் பணி செயலாளர் ராஜம்ஜான்,மாவட்ட அவைத் தலைவர் சுந்தரமகாலிங்கம், பொருளாளர் ஷெரிப்,சுரண்டை நகர செயலாளர் ஏ.கணேசன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் கட்சி தொண்டர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று நலம் விசாரித்தார். ரெட்டியார்சத்திரம் எல்லைப்பட்டியைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி எல்லை இராமகிருஷ்ணன் மகன் யோகேஸ்வரன் விபத்தில் சிக்கி காயமடைந்து சிகிச்சை பெற்றவரை அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தார். அருகில் அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடராஜன், அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால் உட்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### பெரியாரை இழிவாகப் பேச ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க.வால் நியமிக்கப்பட்ட கைக்கூலிகள்!

# பெரியார் இல்லையென்றால் நமக்கு எந்த வாய்ப்பும் கிடைத்திருக்காது!

## திருச்சி வீரவணக்க நாள் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

**திருச்சி, ஜன. 31 -**

**பெரியாரின் கொள்கை காரணமாக ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வால் தமிழகத்தில் காலூன்ற முடியவில்லை. அதனால் பெரியாரை இழிவுபடுத்தி பேச ஒருவரை நியமித்துள்ளார்கள் அவர்கள் பேச்சைக் கேட்டு அவரும் பெரியாரை இழிவுப் படுத்தி வருகிறார் என திருச்சியில் கே.என். நேரு பேச்சுகையில் குறிப்பிட்டார்.**



திருச்சியில் மொழிப் போர்த் தியாகிகள் நினைவு நாளை முன்னிட்டு தி.மு.க சார்பில் வீரவணக்க நாள் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது.

திருச்சி சாஸ்திரி சாலையில் தொடங்கிய ஊர்வலம்தென்னூர் உழவர் சந்தை அருகே குழு மிக்கரை சாலையில் உள்ள கீழப்பழூவூர் சின்னசாமி மற்றும் விராலிமலை சண்முகம் ஆகியோரது நினைவிடங்களில் நிறைவடைந்தது. அங்கு அமைச்சர் கே.என். நேரு தலைமையில் தி.மு.க.வினர் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நடந்த மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அந்த பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:

தமிழகத்தில் இந்தியை திணிக்கப்பார்த்தார்கள். இந்தி படித்தால் தான் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றார்கள். ஆனால் இன்று இந்தி தெரிந்த வடநாட்டினர் தமிழகத்திற்கு தான் வேலைக்காக வருகிறார்கள்.

தமிழக அரசு கடன் வாங்குவது குறித்து எடப்பாடி பழனிச்சாமி பேசி உள்ளார். தகுதி இருந்தால் தான் கடன் வாங்க முடியும். எவ்வளவு கடன் வாங்க வேண்டும் என ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளது. அந்த அளவிற்குதான் கடன் வாங்குகிறோம்.

தி.மு.க. அரசு பொறுப் பேற்ற பின் ரூ.10 ஆயிரம் கோடி அளவில் திருச்சிக்கு மட்டும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் திருச்சி மாவட்டத்தில் என்ன திட்டங்கள் செய்தார்கள் என அ.தி.மு.க.வினர் கூறட்டும். திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் திட்டங்கள் செயல்படுத்துவதால் நிதி அதிகமாகிறது.

மூன்று முறை பெரிய வெள்ளங்கள் வந்துள்ளது. அதற்கான நிவாரண பணிகளுக்கு முழுமையாக தமிழக அரசுதான் நிதி ஒதுக்கியது. ஒன்றிய அரசு நிவாரண நிதி வழங்குவதே இல்லை. தி.மு.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து அறிவித்த, அறிவிக்காத வாக்குறுதிகள் என 393 வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது.

இந்தியாவில் மகளிருக்கான உரிமை தொகையை தமிழகத்தில் முதலமைச்சர் வழங்கினார்கள். அதனை கர்நாடக, மஹாராஷ்டிரா மாநிலங்கள் பின்பற்றுகின்றன.

ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க.வால் தமிழகத்தில் காலூன்ற முடியாததற்கு காரணம் தந்தை பெரியார் தான். அவர்கள், பெரியாரை இழிவாக பேச வேண்டும் என ஒருவரிடம் கூறியுள்ளார்கள். அதனை கேட்டு அந்த நபர் பெரியாரை இழிவுப்படுத்தி பேசி வருகிறார்.

பெரியார் இல்லையென்றால் நமக்கெல்லாம் எந்த வாய்ப்பும் கிடைத்திருக்காது. மோசமான நிலையில்தான் நாம் இருந்திருப்போம். சினிமா விலிருந்து வந்த ஒருவர் பரந்தூரில் விமான நிலையம் அமைக்கக் கூடாது என தமிழக அரசுக்கு உத்தரவு போடுகிறார். எந்தத் தியாகமும் செய்யாமல் முதலமைச்சர் கனவு காண்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டத்தில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறப்பு! சிவகங்கை மாவட்டம்

# சிங்கம்புணரியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் - குடியிருப்பு கட்டிடம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்றார்!

சிங்கம்புணரி, ஜன, 31

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் சிங்கம்புணரியில் திறந்து வைத்த வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் சிறப்புரையாற்றினார்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகே வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் புதிதாக கட்டப்பட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகதுடன் கூடிய குடியிருப்பு கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக நேற்று முன்தினம் காலை திறந்து வைத்தார்.

சிங்கம்புணரி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடம் கட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் பரிந்துரை செய்த கே.ஆர். பெரிய கருப்பன் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்து கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் குத்து விளக்கேற்றி வைத்தார்.

தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களால் நேற்று காலை சென்னை தலைமை செயலகத்திலிருந்து, காணொலி காட்சி வாயிலாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், சிங்கம்புணரி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள, வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு திறப்பு விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வசுரபி முன்னிலையில் குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்தார்.

தொடர்ந்து கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் பேசுகையில், சென்சார்ஜ் கோட்டையின் தளபதியாக தொடர் சாதனை தலைவனாக தமிழ்நாட்டின் முதல்வனாக வலம் வந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழக அரசின் அனைத்துத் துறைகளும் சிறந்து விளங்கி வருகிறது. அதில், பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டு, சம்மந்தப்பட்ட துறைகளுக்கு தேவையான அனைத்து கட்டமைப்புக்கள் மற்றும் நவீன வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், முதல்வர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக்கள் என மொத்தம் 27 கட்டடங்கள் ரூ.16.05 கோடி மதிப்பீட்டில் காணொலி காட்சி வாயிலாக தனது திருக்கரங்களால் திறந்து வைத்து சிறப்பித்துள்ளார்கள்.

அதில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி, சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட சிங்கம்புணரி பேரூராட்சி பகுதியில் ரூ.31.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கான கட்டடத்தினையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்துள்ளது சிறப்பிற்குரியதாகும்.

மேலும், இவ்வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தின் வாயிலாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளை, பொதுமக்கள் எளிதில் பெறுவதற்கு ஏதுவாகவும், அடிப்படையாகவும் இவ்வலுவலகம் அமைந்துள்ளது. இதனை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, அரசின் திட்டங்களை பெற்று பயனடைய வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராம அருணகிரி, வடக்கு ஒன்றிய செயலாளர் பூமிநாதன், சிங்கம்புணரி பேரூராட்சி தலைவரும் திமுக பொதுக் குழு உறுப்பினருமான அம்பலமுத்து,பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம், சிங்கம்புணரி பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் செந்தில்குமார், சிங்கம்புணரி திமுக நகர செயலாளர் கதிர்வேல், நகர அவைத்தலைவர் சிவக்குமார், அயழக அணி மாவட்ட துணை அமைப்பாளர் புகழேந்தி ,மாவட்ட பிரதிநிதிகள் செல்வகுமார், ஞானசேகரன், தனுஷ்கோடி, பூமிநாதன், பிரதிநிதி குடோன் மணி, ஒன்றிய துணைச் செயலாளர் சிவபுரி சேகர் , ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன், நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், ஒன்றிய இளைஞரணி மனோகரன், ,நகர இளைஞரணி அருண் பிரசாத், நகர துணை செயலாளர் அலாவுதீன், மகளிர் அணி நிர்மலா, ரமணி,நகர விவசாய அணி அமைப்பாளர் பரிஞ்சி சரவணன், , கவுன்சிலர்கள் ஜெயக்குமார், மீனா, மணி சேகரன்,சங்கர், ஜெயசித்ரா தேவி, சத்யா, திவ்யா, தொழில் நுட்ப அணி மாடன் சையது, தொழில் நுட்ப அணி பார்த்திபன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் பார்த்திபன், ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் கே ஆர் ஏ கணேசன், கழக முன்னோடி எஸ் வி மங்கலம் சுப மதியரசன், முரசொலி கார்த்திக், இளைஞர் அணி சேர்ந்த யுவராஜ் அம்பலமுத்து, அருண்ராஜ் சிவபுரி சேகர்,.அமுதன், ,மணி,பேச்சாளர் உதயகுமார்,பொன் சரவணன், அழகுராஜா, தங்க குமரன், செல்வம் ,பிரேம்குமார், நவீன்,கனகராஜ், சுரேஷ், சசிகுமார், சாண்டில்யன் ,, இளவரசன், சுந்தரபாண்டி, மணிகண்டன், நாகேந்திரன், கணேசமூர்த்தி, ஸ்டாலின் பிரபு, நவநீதன், மற்றும் சிங்கம்புணரி ஒன்றிய நகர திமுக மற்றும் இளைஞரணி பொறுப்பாளர்கள் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் திமுக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் உத்தரவுபடி – சிவகங்கை மாவட்டம் – சோழவரம்

# கல்லூரிகள் முன்பாக பேருந்துகள் தொடர்ந்து நின்று செல்கிறது!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜன.31-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, சிவகங்கை மாவட்டம், சோழபுரம், புனித ஜஸ்டின் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி மற்றும் சாந்தா கல்வியியல் கல்லூரி முன்பாக பேருந்துகள் தொடர்ந்து நின்று செல்கின்றது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 22.01.2025 அன்று சிவகங்கை மாவட்டத்திற்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை புரிந்த போது, சிவகங்கை திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சோழபுரம் புனித ஜஸ்டின் கலை மற்றும் மகளிர் அறிவியல் கல்லூரி மற்றும் சாந்தா கல்வியியல் கல்லூரி முன்பாக பேருந்துகள் நின்று செல்ல வேண்டும் என கல்லூரி முதல்வர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள். அக்கோரிக்கையினை பரிசீலனை செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அக்கல்லூரி முன்பாக பேருந்துகள் நின்று செல்ல உத்திரவிட்டார்கள்.

மேற்படி உத்தரவிற்கிணங்க, என்னுடைய வழிகாட்டுதலின்படி, சிவகங்கை -திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சோழபுரம் புனித ஜஸ்டின் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் சாந்தா கல்வியியல் கல்லூரி முன்பாக அனைத்துப் பேருந்துகளும் 22.01.2025 முதல் நின்று செல்கின்றன. இது குறித்து 28.01.2025 அன்று சில சமூக வலைதளங்களில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவு பின்பற்றப்படவில்லை என தவறான தகவல் வெளியானது தெரிந்தவுடன், உடனடியாக காரைக்குடி துணை மேலாளர் (வணிகம்) அவர்கள் பேருந்து நிறுத்தத்திற்குச் சென்று ஆய்வு செய்து, கல்லூரி முதல்வர் அவர்களிடம் சென்று பேருந்து நின்று செல்வதை உறுதி செய்தார்.

மேலும், துணை மேலாளர் அவர்களிடம் கல்லூரி முதல்வர், முதலமைச்சர் அவர்களுக்கும், தனக்கும் நன்றி தெரிவித்து பாராட்டுச்செய்தி கடிதம் வழங்கியுள்ளார். அந்த கடிதத்தில் பேருந்துகள் நின்று செல்கின்றன என்றும், சமூக வலைதளங்களில் தவறான செய்தி பதிவிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பேருந்து நிறுத்தத்தில் பேருந்து நின்று செல்வதை கண்காணித்திட தீனதயாளன் என்ற பரிசோதகர் நியமிக்கப் பட்டுள்ளார். கும்ப கோணம் போக்குவரத்துக் கழகத்தை சார்ந்த அலுவலர்கள் அவ்வப்போது கள ஆய்வு மேற்கொண்டதில் அந்தப் பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகள் தொடர்ந்து நின்று செல்கின்றன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இக்கல்லூரி முன்பாக பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, சமூக வலைத்தளங்களில் வரும் செய்தி முற்றிலும் தவறானது, உண்மைக்குப் புறம்பானது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவங்கர் தெரிவித்தார்.

### படப்பை ஆ. மனோகரன் தலைமை! ஏ.வந்தேமாதரம் வரவேற்புரை! காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மருத்துவ அணி

# துணை அமைப்பாளர் தா.அன்பழகன் - சின்னம்மாள் பானு இல்லத் திறப்பு விழா!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. திறந்து வைக்கின்றனர்!

காஞ்சிபுரம், ஜன. 31 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் ஒன்றியக்குழு உறுப்பினர் தா.அன்பழகன் சின்னம்மாள் பானு இல்லத் திறப்பு விழா இன்று ( 31.1.2025 - வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணியளவில் கோவூர் கிழக்கு மாட வீதியில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.வந்தே மாதரம் வரவேற்புரை யாற்றுகிறார்.

ப.சுதாகர், பா.குமரவேல், அ.கண்ணதாசன், பா.ராஜேந்திரன், ஆ.செல்வராஜ், தமிழரசி, சுரேஷ், பா.கு.தமிழ்வாணன், வே.வசந்தகுமார், ஜோஸ்பின், கிளாரா, குமரவேலு, கே.இ.சீனிவாசன், உஷா, வெற்றிவேல், ஆர்.பழனி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்புதிய இல்லத்தை குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக மருத்துவ அணி செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ., மருத்துவர் என். எஸ். கனிமொழி சோமு எம்.பி., ஆகியோர் திறந்து வைத்து சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவில் சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி வந்தேமாதரம், கோ. சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, கே.எத்திராஜ், எம்.ஆர்.சீனிவாசன், வி.ஹரி, டி.பி.செந்தில்குமார், கிருத்திகா தேவி, பி.ஆகாஷ், சபரி ராஜா, ராஜேஷ், அரவிந்தராஜ், து.சுந்தர், கே.வசீகரன், பொன் ஜீவா, பூங்கொடி அரசு, எஸ்.ராஜா தேசிங்கு, எஸ்.சந்தானம், எஸ்.எஸ். கே.துளசிங்கம், பா.ராஜேந்திரன், மு.சுப்பிரமணி, வா.நந்தகோபால், ஏ.மணி, வாசுகி, மகேஷ், வி.ஹரி, மு.ராஜேந்திரன், பா.பரி மேலழகன், தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர்.சாரதி, பெரியநாயகம், சையது சுலைமான், பொன் ரமேஷ் கவி, சங்கீதா வேலு, எஸ்.கர்ணன், ஏழுமலை, லட்சுமி ஞானசேகர், ச.பால கிருஷ்ணன், ராயப்பா, மலர்விழி, தமிழமுதன், தினேஷ், ரேவதி, சத்தியமூர்த்தி, கோதண்டராமன்,

ஜனார்த்தனன், அறிவொளி, நவீன் ராஜ், தீபக் ராஜ், கவி பாரதி, மா.சு.பிரகாஷ், இ. கதிரவன், காப்ப ஆடலரசு, கு.பிரவீன் குமார், எஸ்.சுதாகர்பிரபு, மகேஷ்குமார், ஹரிபாபு, நாராயணன், ஜமீர், இரா. குமரவேல், சே.பார்த்திபன், ஆர். சையத், இளைய பாரதி, இ.பாலாஜி, காமாட்சி பாலு, அமுதப்பிரியா, மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரங்கநாதன், லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினி, எத்திராஜ், சி.பாண்டியன், கே.சுதாகரன், அன்னம்மாள் மோகன், ஜமிலா பாண்டுரங்கன், கௌரி தாமோதரன், திவ்யா சத்தியநாதன், உமா சத்தியமூர்த்தி, எஸ்.பாண்டியன், கே.அரசு, சாந்தாதேவி, சுகுமார் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் தாந்தோணி, தா.மணி மேகலை, அ.கனிஷ்கர், ஐ.மித்யூஷ்கர், அன்பழகன், மைவிழி அன்பழகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.



சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமையில் ஃபெஞ்சல் புயல் தொடர்பாக பேரிடருக்கு பிந்தைய நிரந்தர சீரமைப்புக்கான மதிப்பீடு குறித்து ஆய்வு (Post Disaster Needs Assessment) மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள குழுவுடன் ஆலோசனைக் கூட்டம் 27.01.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, பேரிடர் மேலாண்மை இயக்குநர் மோகனச் சந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.